[திருமதி ஆ. தமிழரசி] [2008 ஏப்ரல் 30

இடத்தை வழங்கலாம் என்று அரசு ஆணையிட்டிருக்கிறது. மேலும் இது சம்பந்தமான வழக்கு நிலுவையிலுள்ள காரணத்தினால், தீர்ப்பு வந்த பிறகு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(எ) தொண்டாமுத்தூர் அருள்மிகு அனுவாவி சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் காவலாளி, யானைக் கூட்டம் தாக்கி இறந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன்.

***திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், தொண்டாமுத்தூர் தொகுதியிலுள்ள அருள்மிகு அனுவாவி சுப்பிரமணியசுவாமி கோயிலில் நேற்று முன்தினம் இரவு 28-4-2008 அன்று, இரவுக் காவலாளி சுப்பிரமணியம் என்பவர் அங்கே பணியாற்றிக் கொண்டிருந்த நேரத்தில், பக்கத்திலே வனப் பகுதியிலேயிருந்து ஒரு யானைக் கூட்டம் அந்தக் கோயிலுக்குள் நுழைந்து அவரைத் தாக்கி சின்னாபின்னப்படுத்தியது. காலையிலே ஆறு மணிக்குமேல் அந்தக் கோயிலுக்குச் சென்றவர்கள் பார்த்த பிறகுதான் காவலாளி இறந்து கிடந்ததுகூட தெரிந்தது. அதனால், அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள் மிகப் பெரிய அதிர்ச்சிக்கும், பீதிக்கும் ஆளாகியிருக்கின்றார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த அந்த அறிவிப்பு, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. அதற்கு நிவாரண உதவிகள் வழங்க வேண்டுமென்றால், மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் அறிவிக்க வேண்டும். ஆகவே, முதல்வர் அவர்கள் அறிவிக்க வேண்டியிருப்பதால், பின்னால் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) பின்னால் சேர்த்து எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள். முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள், உட்காருங்கள்.